# பனிமயம்

பிப்ரவரி 2024



ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

வெள்ளி விழா
சிறப்பிதழ்
3



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளின்படி 2025 யூபிலி ஆண்டுக்கு ஆயத்தமாக இந்த 2024ஆம் ஆண்டு “இறைவேண்டல்” ஆண்டாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. நமது பேராலயத்தில் கடந்த 14.01.2024 அன்று இறைவேண்டல் ஆண்டின் தொடக்க விழா நடைபெற்றது.

எனவே, இந்த ஆண்டு முழுவதும் நாம் தனியாகவும், குடும்பமாகவும், சபையாகவும், திருஅவையாகவும் இறைவேண்டல் செய்வோமாக. “எல்லா வேண்டல்களையும் மன்றாட்டுகளையும் இறைவனிடம் எழுப்புங்கள்; எப்போதும் தூய ஆவியின் துணை கொண்டு வேண்டுதல் செய்யுங்கள். இதில் உறுதியாய் நிலைத்திருந்து, விழிப்பாயிருங்கள்; இறைமக்கள் அனைவருக்காகவும் மன்றாடுங்கள்” (எபே 6:18) என்னும் பவுலடியாரின் அறிவுறையே இந்த ஆண்டின் இலக்காக அமையட்டும்.

இம்மாதம் 14ஆம் நாள் தவக்காலம் தொடங்குகிறது. இத்தவக்காலத்தில் கூடுதலாக நாம் இறைவேண்டல் செய்வோம். தவம், நோன்பு, தியாகங்களை இணைத்து நம் இறைவேண்டல்களை வலிமைப்படுத்துவோம். அப்போது இயேசு கிறிஸ்துவின் அமைதியும், மகிழ்ச்சியும் நமக்கு நிறைவாகக் கிடைக்கும்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 25 தாரகை 6

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### தீராத நோய்க்காக

தீராத நோயால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களின் குடும்பங்களும் தேவையான உடல் மற்றும் ஆன்மக் கவனிப்பும் தோழமையும் பெற நாம் மன்றாடுவோம்

# உள்ளே...

## வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் 3


1. மாசில்லா (தூய்மையான) பேழை (பெட்டகம்) அன்னை மரியா . . . . . . . . . . . . . . . . . . 4
   அருள்பணி. சைமன் ஆல்டஸ்
2. என் அன்னையின் அன்னை! . . . . . . . . . . . . 6
   அருள்சகோ. மரு. கிரேஸ் மரியா
3. திருமலாபுரத்தின் மலையரசி . . . . . . . . . . . . . 8
   அருள்சகோ. ஆல்ட்ரின்
4. மரியன்னையின் முன்னோடிகள் - தோபித்தின் மனைவி அன்னா! . . . . . . 10
   அருள்பணி. குமார்ராஜா
5. பனிமயம் - மீள் பார்வை. . . . . . . . . . . . . . . 12
   கலாபன் வாஸ்
6. அம்மா..... . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14
   கமல லியோனா
7. பனிமய பங்குத் தந்தையர் - அருள்தந்தை ஜெரோசின் . . . . . . . . . . 15
8. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 16
9. மாதம் ஒரு மாதா படம் . . . . . . . . . . . . . . . . 19
10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 20
11. தவக்காலம் 2024 திருநிகழ்வுகள் . . . . . . . . . . 25

# மாசில்லா (தூய்மையான) பேழை (பெட்டகம்) அன்னை மரியா



இறைவனே முதலில் உனை தெரிந்தார்
கறைசிறிதில்லா காத்திருந்தார்...
(தாவீதின் குலமலரே...)

என்ற பாடல் வரிகள் அன்னை மரியாவை இறைவன் மாசு அணுகாமல் காத்ததை எடுத்தியம்புகிறது. கடவுளின் இரக்கம் இவ்வுலக மக்கள்மீது அதிகம் இருந்ததால், மானுடத்தின் கறையினை நீக்க இறைவன் அன்னை மரியாவை கறைப்படாமல் காத்தார்.

ஒரு மரம் நல்ல கனியை தர வேண்டுமென்றால் அந்த மரம் நன்கு கவனிக்கப்பட வேண்டும், அதற்கு நல்ல சூழல் தேவை. இறைமகனை சுமக்க வேண்டுமென்றால் அன்னை மரியா தூய்மை நிறைந்தவராக இருக்க வேண்டும். (நல்ல மரமெல்லாம் நல்ல கனியை கொடுக்கும் - மத் 7:17) அந்த தூய்மை, தூய்மை நிறைந்த உள்ளம், நல்ல கனியை கொடுக்கும் தகுதி, தியாக உள்ளம் ஆகியவை அன்னை மரியாவிடம் இருந்தது.

திருப்பாடல்கள் ஆசிரியர் 97:12இல் "...ஆண்டவரே! என்றென்றும் தூய்மையே உமது இல்லத்தை அழகு செய்யும்" என்று குறிப்பிடுவது போல, அன்னை மரியா தனக்குள் கொண்டிருந்த தூய்மையான உள்ளம் இறைவனின் வருகைக்கான அழகுறு ஆலயமாக மாறியது.

பழைய ஏற்பாட்டிலே, தொடக்க நூல் 6:8இல் "நோவாவுக்கு ஆண்டவரின் அருள்பார்வை கிடைத்தது" என்று பார்க்கிறோம். மண்ணில் மனிதரின் தீச்செயல் பெருகிய காரணத்தினால் கடவுள் மனிதரை படைத்ததற்காக மனம் வருந்தினார். மனிதரை இந்த மண்ணிலிருந்து அழிக்க எண்ணினார். இருந்தபோதிலும்

எல்லோரையும் அழிக்கவில்லை. நோவாவும் அவருடைய குடும்பமும் காப்பாற்றப்படுகிறது. காரணம் நோவா நேர்மையானவராகவும் குற்றமற்றவராகவும் (தொநூ 6:9) இருந்தார். பேழையினுள் இருந்தவர்கள் தூய்மையானவர்களாய், கடவுளுக்கு உரியவர்களாய் இருந்ததால் அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள். பேழை வழியாக கடவுள் அவர்களை காத்தார்.

கபிரியேல் என்னும் வானதூதர் அன்னை மரியாவுக்கு தோன்றி, “அருள்மிகப் பெற்றவரே வாழ்க! அண்டவர் உம்மோடு இருக்கிறார்" (லூக் 1:28) என்று வாழ்த்தினார். கடவுளின் அருளை பெற்ற அன்னை மரியா தூய்மை நிறைந்தவராக இருந்தார். அன்னை மரியா என்னும் தூய்மை நிறைந்த பேழை வழியாக இயேசு மனிதராக இவ்வுலகில் உருபெற்றார். மாசில்லா பேழையான அன்னை மரியா வழியாக இறைமகன் கடந்து வருகையில் அவரும் மாசற்றவராக வெளிவந்தார். இதற்கு, அன்னை மரியா அமல உற்பவியாக, மாசுமறுவற்றவராக கடவுளால் தேர்ந்துக் கொள்ளப்பட்டது தான் காரணம்.

அன்னை மரியா மாசில்லா முறையில் உருவானார் என்பதை தொடக்கக் கால திருஅவைத் தந்தையரே ஏற்றுக் கொள்ள தயங்கினர். புனித பெர்னார்ட், புனித பெரிய ஆல்பர்ட், பொனவெந்தூர், அக்குவின் தோமா ஆகியோர் அவர்களுள் சிலர். மரியா பிறப்புநிலை பாவத்தால் தீண்டப்படவில்லை என்றால், இயேசு கொணர்ந்த மீட்பு மரியாவுக்கு தேவையில்லை என்றாகிடுமே என்ற கேள்வியெல்லாம் தொடக்கக் காலத்தில் எழுந்தது.

அன்னை மரியாவின் அமல உற்பவத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இறையியல் அறிஞரும் அருளாளருமான ஜான் டன் ஸ்காட்டஸ் என்பவர் இருவகை அருள் பற்றி பேசினார். அவையாவன 1. காக்கும் அருள் 2. குணமாக்கும் அருள். திருமுழுக்கின் வழியாக நாம் பெறக்கூடிய குணமளிக்கும் அருள் நம்மை பிறப்புநிலை பாவத்திலிருந்து கழுவி தூய்மைப்படுத்துகிறது. அன்னை மரியா உலக மீட்பரை பெற்றெடுக்க வேண்டிய சூழலில், அவரும் மாசிலிருந்து (அ) பிறப்புநிலைப் பாவத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டிய தேவையிருந்ததால் காக்கும் அருளால் அவர் முன்கூட்டியே காப்பாற்றப்பட்டார். இயேசுவின் மீட்பின் பேறுபலன்கள் எல்லா மனித உயிர்களுக்கும் தேவைதான். அந்த மீட்பின் பேறுபலன் அன்னை மரியாவுக்கு முன்கூட்டியே கொடுக்கப்பட்டது.

கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை (லூக் 1:37) என்பதற்கேற்ப கடவுளின் காக்கும் அருள் அன்னை மரியாவை முன்கூட்டியே காத்து, இயேசுவின் தாயாக மாசில்லா தாயாக உருமாற்றியது. அன்னை மரியாவின் காட்சியும் இதை நமக்கு உறுதிப்படுத்துகிறது. 1858ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்குக் காட்சி கொடுத்த அன்னை மரியா தன்னை “நாமே அமல உற்பவம்” என்று வெளிப்படுத்தினார்.

மாசற்ற அன்னை ஒரு பேழையாக இருந்து மாசற்ற இறைவனை பெற்றெடுத்தார். இதோ நான் ஆண்டவரின் அடிமை என்று தன்னையே கையளிக்கும் முன்னரே கடவுள் அவரை ஏற்றுக் கொண்டார். அவரை அருளால் நிறைத்தார்.

இந்த மாசில்லா அன்னை நமக்கு சுட்டிக் காட்டக்கூடிய படிப்பினை தூய்மை என்பது நமது உள்ளத்திலும் வார்த்தையிலும் செயலிலும் வெளிப்பட வேண்டும் என்பது தான்.

மாசற்ற பேழையான அன்னை மரியே... எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!



**அருள்பணி. சைமன் ஆல்டஸ்**

# என் அன்னையின் அன்னை!

"உருவிலான் உருவாகி, கருவிலான் கருவாகி
தன்னையே உலகினுக்கு, அன்பு கொடையாக்க
இறைவன் தேர்ந்தது, அன்னை மரியை...."



அன்னை மரியாவை என் அன்னையின் அன்னை என்றே அழைப்பேன். காரணம், என் தாய் திருமதி. ஜெபமாலை அன்னை மரியாவின் மீது மாபெரும் பக்தி கொண்டவர். அந்த மரியன்னை பக்தியை இரண்டு குருக்களும், ஓர் அருள்சகோதரியும் உள்ளிட்ட எங்கள் குடும்பத்தின் ஏழு பிள்ளைகளுக்கும் ஊட்டி வளர்த்தார். இன்று நாங்கள் அனைவரும் மாதாவின் பிள்ளைகளாக ஆசீர்வாதங்களுடன் வாழ்ந்து வருகிறோம்.

மூவொரு கடவுளின் நடுவராம் மைந்தனை ஈன்றெடுத்த அன்னை மரியா என்னை ஈன்ற அன்னைக்கு எவ்வளவு நெருக்கமாக இருந்தார்கள் என்பதை வார்த்தைகளில் விவரிக்க முடியாது. எப்போதும் அவர் வாயில் ஒலிக்கும் “அருள் நிறைந்த மரியே வாழ்க” என்ற இறை வேண்டலும், பெண் குழந்தை வரம் வேண்டி அன்னை மரியாவின் பரிந்துரைக்காக அவர் ஏறிய மாதா திருத்தலங்களும் என் அன்னையின் மரியன்னை பக்திக்கு இரு சான்றுகள்.

நான் கருவில் உருவாகும் முன்பே என் அர்ப்பண வாழ்விற்கு அடிக்கல் நாட்டி விட்டார் அன்பு இறைவன். ஆழ்ந்த இறை நம்பிக்கையும், இறைப்பற்றும் நிறைந்த என் அன்னை நான் பிறப்பதற்காகப் போட்ட தவக்கோலங்கள் எத்தனை எத்தனை?

எங்கள் குடும்பத்தில் வரிசையாக மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தபோது, என் பெற்றோர் ஒரு பெண் குழந்தைக்காக ஏங்கினராம். மரியன்னைமீது பெரும் பற்று கொண்டிருந்த என் அம்மா மாதாவைப் பற்றிப் பிடித்து, தொடர் வேண்டுதலில் ஈடுபட்டார்கள். பல மரியன்னைத் திருத்தலங்களுக்கும் திருப்பயணமாகச் சென்றார்களாம். அதன்படி காரைக்காலில் உள்ள “தேற்றரவு மாதா” ஆலயத்திற்குச் சென்றபோது, தேற்றரவு அன்னையிடம் “தாயே, எனக்கு ஒரு பெண் குழந்தை வேண்டும்” என்று அழுது செபித்தார்களாம். அந்த கண்ணீரின் வேண்டுதலுக்கு தேற்றரவு அன்னையின் ஆசீர் கிடைத்தது.

மூன்று ஆண் குழந்தைகளுக்குப் பிறகு 1968ஆம் ஆண்டு நான்காவது பெண் குழந்தையாக நான் பிறந்தபோது என் பெற்றோர் பெருமகிழ்வு கொண்டனர். எனக்கும் அந்த அன்னையின் பெயரை சூட்டி ஆனந்தம் கண்டார்கள்.

அது மட்டுமல்ல, நன்றிக் கடனாக என்னை "காணிக்கை அன்னை" சபைக்கு காணிக்கையாக்கி விட்டார்கள். இந்த பிறப்பின் வரலாற்றை அம்மா என்னிடம் பல முறை சொல்லியிருக்கிறார்கள். "உன்னை காரைக்கால் அழைத்துச் சென்று தேற்றரவு மாதாவுக்கு நன்றி செலுத்த வேண்டும்" என்று பல முறை என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். இருப்பினும், எனது முப்பதாவது வயதில் ஒரு துறவியாகத்தான் நான் அங்கே செல்ல முடிந்தது. அம்மா என்னை அழைத்துச் சென்று நேர்த்திக் கடன் செலுத்தியதை இன்று வியப்போடு நினைவு கூறுகிறேன்.

அம்மாவின் மாதா பக்தி குழந்தைப் பருவத்திலிருந்தே எங்களை ஈர்த்தது. ஆற்றல் நிறைந்த ஓர் ஆன்மீக ஆயுதம் செபமாலை என்பதை உணர்ந்து திருச்செபமாலையை எப்போதும் இடுப்பில் ஏந்தி இருப்பார்கள். செபமாலை பக்தியில் தனித்து ஒளி வீசிய அம்மா துன்பக் கடலில் தவிக்கையில், சோதனைகளில் அலைக்கழிக்கப்படுகையில் செபமாலை செபிக்க வேண்டும் என்று எங்களுக்குக் கற்றுத் தந்தார்கள். மேலும், அன்றாடம் சந்திக்கும் இடர்கள், தடைகள், சோதனை நேரங்களில் "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்ற வெற்றி மன்றாட்டை செபிக்க எங்களைத் தூண்டியவரும் அம்மாதான்.

அந்த இளமைப் பாடத்தை இன்றுவரை நான் மறக்கவில்லை. நாள்தோறும் செபமாலை செபிப்பதோடு, நெருக்கடி வேளைகளில் "மிகவும் இரக்கமுள்ள தாயே" மன்றாட்டைத் தவறாது வேண்டி வருகிறேன். குறிப்பாக, தற்பொழுது கோவை, போத்தனூரில் மரியன்னையின் பெயரிலேயே இயங்கிவரும் எங்கள் மருத்துவமனையில் தலைமை மருத்துவராகப் பணியாற்றுகின்ற வேளையில், பல உயிர்களைக் காக்கப் போராடும் போதெல்லாம் அந்த வெற்றி மன்றாட்டுதான் எனக்கு வெற்றிகளைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதற்காக அம்மாவுக்கு எனது நன்றிகள்.

அம்மாவின் மாதா பக்தி மேலோட்டமானதல்ல. அன்னை மரியாவின் மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டுவதிலும் அம்மா சிறந்த மாதாவின் மகளாக விளங்கினார்கள். பொறுமை, எளிமை, பரிவு, தியாகம், ஆழமான இறை நம்பிக்கை, துணிச்சல் ஆகிய பண்பு நலன்கள் நிறைந்த அம்மா எங்கள் எல்லாருக்குமே ஒரு வியப்பின் அடையாளம்தான். அன்னை மரியன்னையின் பாதமலர்களில் பல மணி நேரம் அமர்ந்து செபித்து, எங்களையும் அப்படியே வளர்த்தார்கள். விண்ணுக்கும், மண்ணுக்கும் தலைவியான மரியன்னையிடம் பற்றுறுதி கொள்ள எங்களை ஊக்குவித்தார்கள். "மரியன்னை நம் தாய்", "மரியன்னை நம் பரிந்துரையாளர்", "மரியன்னை நம் நம்பிக்கை" என்று கற்றுக்கொடுத்தார்கள் எங்கள் அம்மா.

இன்று நான் இறைப்பணியோடு, மருத்துவ பணியும் செய்து அர்ப்பண வாழ்க்கை வாழ என் தாயே காரணம். அந்த மண்ணக அன்னைக்கும், நம் விண்ணக அன்னைக்கும் நான் நன்றி கூறுகிறேன்.

எல்லாத் தாய்மார்களும் தங்கள் பிள்ளைகளுக்கு பால் ஊட்டும்போதே, மரியன்னை பக்தியையும் ஊட்டுவார்களாக. எல்லா அன்னையரும் தங்கள் குழந்தைகளின் கரம்பிடித்து மரியன்னையின் பக்திப் பாதையில் நடத்திச் செல்வார்களாக!



அருள்சகோ.
மரு. கிரேஸ் மரியா

# திருமலா புரத்தின்



# மலையரசி

இன்றைய தொழில்நுட்பக் காலத்தில் 'underrated' என்ற வார்த்தை சமூக வலைதளங்களில் பலராலும் பயன்படுத்தப் படுகிறது. ஒரு திரைப்படமோ, பாடலோ நன்றாக இருந்தும் அது பிரபலமாகவில்லை என்றால் அதனை 'underrated movie, underrated song' என்று சொல்வார்கள். அது போலவே பழமையும், வரலாற்று சிறப்புமிக்கதும், பல புதுமைகளும், நடைபெறும் திருமலாபுரம் மலைக்கோவில் பலருக்கும் தெரியாத ஒரு ஆலயமாக இருக்கிறது. அவ்வாலயத்தின் வரலாற்றை இக்கட்டுரையில் காண்போம்.

திருமலாபுரம் மலைக்கோவில் தென்காசி மாவட்டம் கடையநல்லூர் தாலுக்காவை சேர்ந்த திருமலாபுரம் கிராமத்தில் அமைந்திருக்கிறது. இக்கோவிலானது பாளையங்கோட்டை மறைமாவட்டம் சேர்ந்தமரம் கத்தோலிக்க முறையின்படி அமைந்த பங்கிற்கு உட்பட்டது. இக்கோவில் 110 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இக்கோவிலானது 1913 ஆம் ஆண்டு அருட்தந்தை இஞ்ஞாசி சுவாமியால் கட்டப்பட்டது.

அருட்தந்தை இஞ்ஞாசிசுவாமி பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் முதன்மை குருவாக பணியாற்றியவர். இவர் சேர்ந்தமரம் பங்கின் பங்குத்தந்தையாக இருந்தபோது புனித லூர்து அன்னைக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்றும் அதனை ஒரு மலைமீது கட்ட வேண்டும் என்றும் அன்னையின் புகழ் பரவ வேண்டும் என்றும் நினைத்தார். அதன்படி அவர் சேர்ந்தமரம் பங்கில் உள்ள வீரசிகாமணி என்ற மலையில் அன்னைக்கு ஒரு ஆலயம் கட்ட திட்டமிட்டார். இவ்வேளையில் அருட்தந்தை இஞ்ஞாசிசுவாமி அவர்களுக்கு புனித லூர்து

அன்னை கனவில் காட்சியளித்து கோவிலை வீரசிகாமணி மலையில் அல்லாமல் திருமலாபுரம் மலைமீது கட்டுமாறு பணித்தார். ஆனால் திருமலாபுரம் மலை வீரசிகாமணி மலையைவிட மிக உயரமானதும் தண்ணீர் எடுக்க வாய்ப்பில்லாமலும் இருந்திருக்கிறது. இதன் பொருட்டு அருட்தந்தை இஞ்ஞாசிசுவாமி அவர்கள் அன்னையிடம் மன்றாட அன்னையவர்கள் மோசே பாறையை தட்டிய பொழுது தண்ணீர் வந்தது போலவே திருமலாபுரம் மலையிலுள்ள பாறையை தோண்டும் உமக்கு தண்ணீர் கிடைக்கும் என்று அருள் புரிந்தார். அதுபோலவே பாறையை தோண்ட திருமலாபுரம் மலையில் அற்புத நீரூற்று பொங்கி வழிந்தது.

இக்கோவில் வேலையானது 1911ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1913ஆம் ஆண்டு நிறைவடைந்தது. இக்கோவிலை திருமலாபுரம் ஊர் மக்கள் அனைவரும் இணைந்து கட்டுமான பொருட்களை மலைமீது சுமந்து சென்று இக்கோவிலை கட்டியுள்ளனர். இக்கோவில் சுண்ணாம்பும் பதினியும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. அருட்தந்தை இஞ்ஞாசிசுவாமி அவர்களால் 1913ஆம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்டது.

இக்கோவிலிலுள்ள புனித லூர்து அன்னையின் திருச்சுருவமானது பிரான்ஸ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. திருமலாபுரம் மலைக்கோவிலில் மலையரசியாக இருந்து காட்சியளிக்கும் நமது லூர்து அன்னை அங்கு வரும் இறை மக்கள் அனைவருக்கும் புதுமைகளையும் உடல் நலத்தையும் இறைவனிடம் மன்றாடி பெற்று தருகிறார். இறைவன் மீதும் அன்னையின் பரிந்துரையின் மீதும் நம்பிக்கை கொண்ட இறைமக்கள் இன்னும் அற்புத நீரூற்றிலிருந்து புதுமைகளை பெற்றுக் கொண்டு வருகிறார்கள். மலைக்கோவிலில் நடைபெறும் அசன விருந்துகளுக்கு அற்புத நீரூற்றிலிருந்து தான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இந்த அற்புத நீரூற்று தாகம் கொண்டவரின் தாகத்தையும், நோயுற்றோருக்கு நலன்களையும் தருகிறது. இந்நீரை பருகுகின்ற குழந்தை பாக்கியமற்ற தம்பதியர் குழந்தைச் செல்வம் பெறுகின்றனர். பேய், பில்லி சூனியம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோர் நலமடைகின்றனர்

பிரான்ஸ் நாட்டில் உள்ள லூர்து அன்னையின் திருத்தலத்திற்கும் தமிழ்நாட்டிலுள்ள திருமலாபுரம் மலை கோவிலுக்கும் பல பொருத்தங்கள் இருக்கின்றது. 1858 ஆம் ஆண்டு பெர்னதத் என்ற சிறுமிக்கு அன்னை காட்சியளித்து ஆலயம் கட்டுமாறு பணித்தார். அதுபோலவே திருமலாபுரம் மலைக்கோவில் கட்டுமாறு பணிக்க லூர்து அன்னை அருள்தந்தை இஞ்ஞாசிசுவாமி அவர்களுக்கு காட்சியளித்துள்ளார். லூர்து நகரத்திலே நடந்த காட்சியின்போது அற்புத நீரூற்று அன்னையின் பாதத்திலிருந்து தோன்றியது. அது போலவே இங்கும் அற்புத நீரூற்று அன்னையின் ஆசியுடன் பாறையில் இருந்து தோன்றியது. ஆதலால் இக்கோவிலை தென் தமிழகத்தின் லூர்து அன்னை ஆலயம் என்றும் அழைக்கலாம்.

எல்லா சனிக்கிழமைகளிலும் காலை 8.45 மணிக்கு திருப்பலி நடைபெறும். ஆங்கில மாதத்தின் முதல் சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு முதல் திருப்பலியும் தொடர்ந்து திவ்ய நற்கருணை ஆசிரும் நடைபெறும். காலை 11 மணிக்கு இரண்டாவது திருப்பலியும் அதனைத் தொடர்ந்து சாதி, மத, பேதமின்றி அன்னையை தேடி வரும் அனைவருக்கும் ஆசன விருந்தும் நடைபெறும்.

திருமலாபுரத்தின் மலையரசியே வாழ்க!!!



**அருள்சகோ. ஆல்ட்ரின்**

*மரியன்னையின் முன்னோடிகள் : 7*

# தோபித்தின் மனைவி அன்னா!



எல்கானாவின் மனைவி, இறைவாக்கினர் சாமுவேலின் தாய் அன்னாவை அனைவரும் அறிவோம். ஆனால், தோபித்தின் மனைவியும், தோபியாவின் தாயுமான அன்னாவைப் பலருக்கும் தெரியாது. ஏழு இணைத் திருமுறை நூல்களுள் முதலாவதான தோபித்து நூலில் தான் இந்த அன்னாவை நாம் சந்திக்கிறோம்.

தோபித்தும், அன்னாவும் அன்பும், அறனும் உடைத்தான ஒரு மண இணையர் என்பதற்கான சான்றுகள் இந்நூலில் பல உள்ளன. ஒரு மனைவியின் மனநிலையைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப ஆறுதலும், ஆதரவும் தரும் நல்ல கணவராக தோபித்தும், தன் உணர்வுகளைத் தம் கணவரிடம் உரிமையோடு எடுத்துச் சொல்லும் மனைவியாக அன்னாவும் காட்சி தருகிறார்கள்.

தோபித்து பாசமும், பரிவும் நிறைந்த ஒரு கணவர் என்பதையும், அன்னா பாசமே உருவான ஒரு தாய் என்பதையும் உணர்வுபூர்வமாகக் காட்டும் ஓர் எடுத்துக்காட்டு ஐந்தாம் அதிகாரத்தில் வருகிறது. அசரியா என்னும் இளைஞனின் தோற்றத்தில் வரும் வானதூதர் இரபேலுடன் தம் மகனை நெடுந்தொலைவுப் பயணத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்கிறார் தோபித்து. அப்போது அன்னா அழுதுகொண்டே "ஏன் என் குழந்தையை அனுப்பினீர்? அவன் நமக்கு ஊன்றுகோலும் உறுதுணையும் அல்லவா? பணமா பெரிது? நம் குழந்தை அதைவிட மதிப்பு வாய்ந்தவன் அல்லவா? ஆண்டவர் நமக்கு அருளிய வாழ்வே நமக்குப் போதுமே" (தோபி 5:18-20) என்கிறார். இது அன்னாவின் தாய்மைப் பண்பை மிக உயர்வாகக் காட்டுகிறது.

இந்த அழுகைக்கு தோபித்து ஆற்றும் எதிர்வினையும் பாராட்டுக்குரியது. "கவலை வேண்டாம். நம் மகன் நலமே சென்று திரும்புவான். அவன் நலமுடன் திரும்பும் நாளை நீ காண்பாய். எனவே, கவலை வேண்டாம், அன்பே." (தோபி 5:21-22) என்று ஆறுதல் கூறுகிறார். "கவலை வேண்டாம்" என இருமுறை அவர் கூறுவதையும், "அன்பே" என்னும் பாசத்தின் சொல்லாடலையும் நாம் கவனிக்கிறோம். "அதைக் கேட்ட தோபியாவின் தாய் அழுகையை நிறுத்தினார்" (தோபி 5:23) என்பது தோபித்துக்குக் கிடைத்த பாராட்டுதானே! இத்தம்பதியர் திருக்குடும்பத்தின் தலைவர் யோசேப்பையும், மரியாவையும் நமக்கு நினைவூட்டுகின்றனர்.

மேதினா சென்ற மகன் தோபியா நெடுநாள் கழிந்தபின்னும் திரும்பி வராததால் அவரின் பெற்றோர் கவலையடைந்தனர். தந்தையைவிட

தாய்தான் அதிகக் கலக்கம் கொள்வார் என்பதுதானே உண்மை. அன்னா அழுது புலம்பினார், கண் கலங்கினார். அப்போது தமது கவலையையும் பொருள்படுத்தாது, தம் மனைவிக்கு ஆறுதல் சொன்னார் தோபித்து. "அன்பே, பேசாமல் இரு. கவலைப்படாதே. நம் மகன் நன்றாய்த்தான் இருக்கிறான். அங்கு அவர்களுக்கு எதிர்பாராமல் ஏதாவது நடந்திருக்கலாம். அவனுடன் சென்ற மனிதர் நம்பத்தக்கவர். நம் உறவினர்களுள் ஒருவர். அன்பே, மகனுக்காக வருந்தாதே. விரைவில் அவன் திரும்பிவிடுவான்' என்று தம் மனைவியைத் தேற்றினார்" (தோபி 10:6). இங்கே காரண விளக்கத்தோடு தம் மனைவிக்கு ஆறுதல் சொல்வதோடு, "அன்பே" என இருமுறை விளிப்பது நம் கவனத்தைத் தொடுகிறது. தோபித்து தம் மனைவிக்கு "மூளை", "இதயம்" என இரண்டு உளவியல் கோணங்களிலிருந்தும் தேறுதல் தருவது இன்றைய உளவியல் உணர்ந்த காலகட்டத்தில் வாழும் நம்மை வியக்கவைக்கிறது.

இந்தக் குடும்பத்தின் தலைவியான அன்னா, திருக்குடும்பத்தின் தலைவியான அன்னை மரியாவின் முன் சாயலாக இருக்கிறார் என்பதை இருவருக்கிடையேயுள்ள ஒற்றுமைகளைக் காணும்போது நாம் உணர்கிறோம்.

**1. நல்ல மனைவி.** திருக்குடும்பத்தின் தலைவியான அன்னை மரியாவைப் போலவே, தோபித்தின் மனைவியான அன்னாவும் பொறுப்புள்ள ஒரு குடும்பத் தலைவியாக, நல்லதொரு மனைவியாக இந்நூலில் வலம் வருகிறார். செல்வந்தரான தோபித்து எதிர்பாராதவிதமாகக் கண் பார்வையை இழந்தபோது, பொறுப்புள்ள ஒரு மனைவியாக பெண்களுக்குரிய கை வேலைப்பாடுகளில் ஈடுபட்டார். தன் கைவேலைப்பாடுகளை அவர் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்க அவர்கள் அவருக்குக் கூலி கொடுப்பார்கள் (தோபி 2:11).

**2. மகனைப் பிரிந்த கவலை.** எருசலேம் திருப்பயணத்தின்போது குழந்தை இயேசு எருசலேமிலேயே தங்கிவிட, மூன்று நாள்கள் மகனைப் பிரிந்த துயரில் தவித்தார் மரியா. அவரைக் கண்டபோது, "உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையுடன் தேடிக்கொண்டிருந்தோமே" (லூக் 2:48) என்று தன் கவலையை, அக்கறையை வெளிப்படுத்தினார். அதுபோலவே, எக்பத்தானா நகருக்குப் பணம் பிரிப்பதற்காகச் சென்ற மகன் தோபியா திரும்பிவரத் தாமதமானதால் அன்னா கவலை கொண்டார். "ஒருவேளை அங்கு தாமதமாகிவிட்டதோ? கபேல் இறந்திருப்பாரோ? தோபியாவுக்குப் பணம் கொடுக்க யாரும் இல்லையோ?" என்றெல்லாம் எண்ணி தோபித்து கவலை கொண்டார். அன்னாவோ, "என் மகன் மறைந்துவிட்டான். அவனை இனி உயிரோடு காணமுடியாதே என்று மகனை நினைத்து அழுது புலம்பத் தொடங்கினார். "ஐயோ, என் மகனே, என் கண்களின் ஒளியான உன்னைப் போகவிட்டேனே" (தோபி 10:4-5) என்று கலங்கினார்,

**3. மகனைக் கண்டதும் மகிழ்ச்சி.** எருசலேம் கோவிலில் குழந்தை இயேசுவைக் கண்ட மரியா மகிழ்ந்ததுபோலவே, வெளிநாடு சென்று வெற்றிகரமாகத் திரும்பிய தம் மகன் தோபியாவைக் கண்டதும் பெருமகிழ்வடைந்தார் அன்னா. "அன்னா ஓடி வந்து தம் மகனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, 'மகனே, உன்னைப் பார்த்துவிட்டேன். இனி நான் இறக்கலாம்' என்று கூறி மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தார்" (தோபி 11:9).

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் அன்னாவும் மரியன்னையின் ஒரு முன்னோடிதான் என்பதை நமக்கு எடுத்துரைக்கின்றன.



அருள்பணி. குமார்ராஜா

41

# 'பனிமயம்' 2020-2021 – மீள் பார்வை

**இறையடியார் 12-ஆம் பத்திநாதர்**

அண்மைக் காலத் திருத்தந்தையருள் மாபெரும் மரியன்னைப் பக்தர் என்னும் பெருமைக்குரியவர் திருத்தந்தை 12-ஆம் பத்திநாதர் தாம். அவருடைய பணிக்காலச் செயல்பாடுகளில் மரியன்னை பெற்றிருந்த சிறப்பிடம் நம்மை வியக்க வைக்கிறது.

**மரியன்னையின் விண்ணேற்பை** திருச்சபையின் நம்பிக்கை மறையுண்மையாக அறிவித்தது, அவர் காலத்தில் செய்த மிகப் பெரிய மரியன்னைப் பணி. 1950ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள், "என்றும் கன்னியான அன்னை மரியா, தமது இவ்வுலக வாழ்வை முடித்தபின், உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மாட்சிக்குள் ஏற்கப்பட்டார்" என்பதை நம்பிக்கை மறையுண்மையாக அறிவித்தார்.

1954ஆம் ஆண்டு, **'மரியன்னை ஆண்டு'** என்று அறிவித்து, அந்த ஆண்டு முழுவதும் மரியன்னைப் பக்தி முயற்சிகள் உலகெங்கும் நடைபெறச் செய்தார். திருச்சபையின் முதல் "மரியன்னை ஆண்டு" அதுதான்.

1954ஆம் ஆண்டு, **'அரசியான அன்னை மரியா'** என்னும் விழாவை அறிமுகப் படுத்தினார். இவ்விழா, ஆண்டுதோறும் ஆகஸ்டு 22 அன்று கொண்டாடப்படுகிறது.

1942ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள், மனுக்குலத்தை மரியாவின் மாசற்ற திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.
**– அருள்பணி. குமார்ராஜா**

**பனிமயத் தாய்**

உலகில் எண்ணற்ற ஆலயங்கள் அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கெல்லாம் இல்லாத பல்வேறு சிறப்புகள் தூத்துக்குடி புனித பனிமயத் தாயின் பேராலயத்திற்கு உண்டு. இப்பேராலயத்தில் நடைபெறும் விதவிதமான வழிபாடுகள், திருத்தந்தை வாழும் உரோமையிலும் இல்லை. இயேசு இறந்து உயிர்த்தெழுந்த எருசலேமிலும் இல்லை!

பனிமயத்தாயின் பிள்ளைகளைப்போல உணர்வுரீதியாக வழிபாடுகளில் பங்கேற்பதை உலகில் எங்கும் காண்பதற்கில்லை. பனிமயத்தாயின் பிள்ளைகள், அத்தாயைத் தேடி வர ஒருபோதும் தயங்குவதில்லை.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தமிழகம் எங்கும் வறட்சி. தூத்துக்குடியும் அதற்கு விதிவிலக்கல்ல. அப்பொழுது தூத்துக்குடி மாநகராட்சியின் ஆணையராக இருந்தவர் (பிற மதத்தைச் சேர்ந்தவர்) **திரு. எட்வின் பாண்டியன்** வழியாக எனக்கு ஒரு செய்தி சொல்லி அனுப்பியிருந்தார். "ஃபாதரிடம் மழைக்காக மாதா கோயிலில் சிறப்பு வழிபாடு நடத்தச் சொல்லுங்கள்"

அவரது வேண்டுகோளை ஏற்று, அவ்வருடம் சனவரி 18ஆம் நாளன்று வழிபாடு நடத்தப்பட்டது. அன்று மழையும் பெய்தது. அடுத்த நாள் பத்திரிகையிலும் இச்செய்தி வெளியானது. அந்நாளில் இடியிலிருந்து தூத்துக்குடி நகரைக் காத்த தாய், இந்நாளில் மழை பொழிந்து வறட்சியிலிருந்து காப்பாற்றியது அவள் என்றும் முத்துநகரின் தாய்தான் என்பதைப் பறைசாற்றியது.
**– அருள்தந்தை லெரின் டிரோஸ்.**

**புனித சவேரியார்**

முத்துக் குளித்துறையில் தமது மறைப் பணியின்போது, தமிழ் மொழி பெயர்ப்பில்

தமக்கு உதவுவதற்காக, குருத்துவம் பயின்று கொண்டிருந்த மூன்று பரவ குல மாணவர்களையும் தன்னுடன் முத்துக்குளித்துறைக்கு அழைத்து வந்தார். அவர்கள் **மனுவேல், கஸ்பார், பிரான்சிஸ் கொய்லோ** ஆவார். மூவருள் மனுவேலும், கஸ்பாரும் திருத்தொண்டர்கள் (DEACONS), மூன்றாமவர், இளநிலை மாணவராகும். இவர்கள் மூவரும் தூத்துக்குடியைச் சேர்ந்தவர்கள். 1544ஆம் ஆண்டில், கஸ்பார், மனுவேல் அருட்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தப் பட்டனர். இவர்கள்தான் பரவகுலத்தின் முதல் அருள்பணியாளர்கள். **– தி. சொர்ணராஜன் விக்டோரியா.**

**வியாகுல அன்னை**

துன்பத்தில்தான் மரியாள் தனது சீடத்துவத்தை நிறைவு செய்தார். நாம் இயேசுவின் உண்மையான சீடர்கள் என்றால், அன்றாடம் அன்னை மரியாவைப் போன்று, நம் துன்பச் சிலுவைகளை மனத் துணிவுடன் உள்ளார்ந்த விருப்பத்துடன் தூக்கிக்கொண்டு அவர் பின்னே செல்ல வேண்டும்.

நாம் சந்திக்கும் ஒவ்வொரு வேதனையும் கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கெடுப்பதற்கு கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் வாய்ப்பாக உணர்வோம். அவரது பாடுகளில் குறைவானதை நாம் நிறைவு செய்கிறோம் (1கொலோ 1:24) என்ற உணர்வைப் பெற்றுக் கொள்வோம். **– அருள்பணி. பென்சிகர் லூசன்.**

★ தூய பனிமய அன்னை பேராலய மறைப்பணித்தள மக்களிடம் ஒரு வழக்கம் இருப்பதைக் காண்கிறோம். ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் அல்லது இரண்டாவது சனிக்கிழமை மதியம் ஒரு வண்டியில் **'சாந்த லேனா'** என்ற ஒரு பாய்க்கப்பல் மாதிரியை நகர வீதிகளின் வழியாகச் சுற்றி வருவது, பின் ஞாயிற்றுக்கிழமை சிந்தாயாத்திரை மாதா திருவிழாக் கொண்டாடுவது.



மணமுடித்த புதுமணத் தம்பதியர் தங்கள் தாம்பத்ய வாழ்க்கையைத் தொடங்குமுன், சிந்தாயாத்திரை மாதா கோயிலுக்குச் சென்று வணங்கி, எதிரே கடற்கரையில் தங்கள் கால்களை நனைத்து வருவது வழக்கம்.

நாவிஸ் – NAVIS – என்றால், லத்தீன் மொழியில், கப்பல்.

நேவிஸ் – NEVIS – என்றால், இஸ்பானிய மொழியில், பனி.

**– செல்வராஜ் மிராந்தா.**

★ கத்தோலிக்கத் திருஅவை இல்லாத நாடுகளே இல்லை எனத் துணிவுடன் சொல்லாமல், கம்யூனிச நாடான சைனாவாக இருந்தாலும், இஸ்லாமிய நடுநாயக நாடான சவுதி அரேபியாவாக இருந்தாலும், உலகின் ஒரே இந்து நாடு என்று சொல்லப்படும் நேபாளமாக இருந்தாலும், அங்கும் கத்தோலிக்கத் திருஅவை உயிர்த்துடிப்புடன் இருக்கிறது. உலகில் கத்தோலிக்கர் இல்லாத நாடு எதுவுமே இல்லை என்றும் மாபெரும் பெருமை நமக்கு மட்டுமே உண்டு. உலகின் ஏழு கண்டங்களிலும் பெரிய, சிறிய நாடுகள் அனைத்திலும் இயங்கி வருவதால், உண்மையிலேயே உலகம் தழுவிய பன்னாட்டுத் திருஅவையாக நாம் இருப்பதில் பெருமிதம் கொள்வோம். **– மிலியன்**



**கலாபன் வாஸ்**



தங்கத் தேர் 10 கவிதைகள்

# அம்மா.....



கற்புதனை மீறாமல் அற்புதனை ஈன்றவளே.....
ஆசை துறந்து தூசையோடு வாழ்ந்த ஓசையே.....
காலன் பாலனை தீண்டவிடாது காத்தவளே.....
இம் மரி பெற்றதால்தான் செம்மறியாய் வாழ்ந்தீரோ நீர்....
உனை சரியா அறியார் பேசுவதை மன்னித்திடு மரியா.....

கானானில் தேனா ரசம் கொடுக்க காரணம் நீதாம்மா....
திருவிழா கூட்டத்துல காணாமல் போன மகனை நினைத்து உன்
இருவிலாவும் வலிச்சதை நான் அறிவேன் தாயே....
கல்வாரி வரை கல் வாரி வீசியது போல்
துயர் கொண்ட தாயம்மா நீ....

*கமல லியோனா*



பனிமய பங்குத் தந்தையர் 2



# அருள்தந்தை ஜெரோசின் அ.கற்றார்

கடந்த 25 ஆண்டுகளில் பனிமயம் இதழை வளர்த்தெடுத்த பெருமைமிகு பங்குத் தந்தையரின் வரிசையில் இரண்டாவதாக உயர்ந்து நிற்பவர்கள் அருள்தந்தை ஜெரோசின் அவர்கள். அன்னார் 2004ஆம் ஆண்டில் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்கள். திருத்தலத்தின் அனைத்துப் பணிகளோடும், பனிமயம் இதழை வளர்க்கும் கடமையையும் தன்மீது ஏற்றுக்கொண்டார்கள்.

மாதந்தோறும் மனம் கவரும் ஆசிரியர் உரையை எழுதினார்கள். ஆண்டுக்கொரு செயல் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். எடுத்துக்;காட்டாக, 2006ஆம் ஆண்டின் செயல்திட்டமாக “இறைத் திட்டம், இறைமாட்சியைத் தேடும் இறைவாக்குக் குடும்பங்களாக ஆவோம்” என்பதை முன் வைத்தார்கள்.

2007ஆம் ஆண்டு பேராலயம் “பசிலிக்கா”வாக உயர்த்தப்பட்ட 25 ஆண்டு வெள்ளி விழா, பேராலயத்தின் 425 ஆண்டு நிறைவு என்னும் இரட்டை விழாக்களைக் கொண்டாடும் பேறு தந்தையவர்களுக்குக் கிடைத்தது.

அந்த ஆண்டில் பனிமயம் இதழில் மாதம் ஒரு கருத்தை முன் வைத்து, படைப்புகளை உருவாக்க ஊக்குவித்தார்கள். எடுத்துக்காட்டாக, மார்ச் இதழ் “மனமாற்றம்” என்னும் மையக் கருத்திலும், நவம்பர் இதழ் “இறப்பின் இறையியல்” என்னும் மையக் கருத்திலும் வெளிவந்தன.

அன்றோ ரூபன், மணவைப் பிரியன் போன்ற எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு, தொடர்ந்து எழுதினர். டயானா வியானி, ஜெரினா திபூர்சியுஸ், ரெஜினா கிரகோரி, தென்றல் சகாயராஜ் போன்ற பெண் எழுத்தாளர்கள் தொடர்ந்து எழுதி பனிமயத் தாயைப் பெருமைப்படுத்தியுள்ளனர். தற்போது சிவகங்கை மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்றுள்ள மேதகு மதுரை ஆனந்த் மே மாத இதழில் மாதாவின் அருங்காட்சிகளைப் பற்றி எழுதியுள்ளது நமக்கு வியப்பூட்டுகிறது. பனிமயம் இதழின் இன்றைய ஆசிரியரான அருள்பணி. குமார்ராஜா “அருள்வேந்தன்” என்னும் புனைபெயரில் அப்போதே மரியியல் தொடர் ஒன்றை எழுதியுள்ளது இன்னொரு வியப்பு. மாதந்தோறும் திருத்தலச் செய்திகள் என்னும் பகுதியில் திருத்தலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு இதழின் அளவு ஏ4 அளவுக்குப் பெரிதாக்கப்பட்டுள்ளது நம் கவனத்தை ஈர்க்கிறது. வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. புதிய பகுதிகளுள் “என் கேள்விக்கென்ன பதில்?” என்னும் கேள்வி-பதில் பகுதியும் அடங்கும். பனிமயத்தின் சார்பாக அமுதன் அடிகளாரைக் கொண்டு பனிமயம் எழுத்தாளர் பயிற்சி முகாம் நடத்தியதும் தந்தை அவர்களின் ஒரு சாதனையே.

இத்தனை பணிகளைச் செய்து, இதழை வளர்த்த தந்தை அவர்களை பனிமயத்தின் வெள்ளி விழா ஆண்டில் நன்றியோடு நினைவுகூர்கிறோம். தற்பொழுது இத்தாலியின் கியேத்தி மறைமாவட்டத்தில் இறைபணியாற்றும் தந்தை அவர்களுக்குப் பனிமய அன்னையின் ஆசிகளை வழங்குகிறோம்.

அருள்பணி. குமார்ராஜா

# விவிலியப்போட்டி 108

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## திருப்பாடல் 66 - 70

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1. கடவுள் நம் கடவுள் நமக்கு .......................... ஆசி வழங்கினார்.
2. அவரிடம் மன்றாட என் .......................... திறந்தது.
3. உம் திருமுக .......................... எம்மீது வீசுவீராக.
4. தனித்திருப்போர்க்குக் கடவுள் .......................... அமைத்துத் தருகின்றார்.
5. ஆண்டவரே! எனக்கு உதவி செய்ய .......................... வாரும்.
6. கடவுளே! நீர் .......................... மீட்பு எனக்கு பாதுகாப்பாய் இருப்பதாக.
7. கடவுளை நாடித் தேடுகிறார்களே உங்கள் உள்ளம் ..........................
8. நாளும் நம்மை அவர் .......................... கொள்கின்றார்.

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.02.2024**

## விவிலியப்போட்டி 107

**ஜனவரி 2024** விடைக்குறிப்புகள்

### திருப்பாடல் 61 - 66

| | | |
|---|---|---|
| 1. | கடவுளே | திபா 63:1 |
| 2. | எந்நேரமும் | திபா 61:4 |
| 3. | என்றென்றும் | திபா 61:7 |
| 4. | எக்காலத்திலும் | திபா 62:8 |
| 5. | நாள்தோறும் | திபா 61:8 |
| 6. | ஆண்டு முழுவதும் | திபா 65:11 |
| 7. | வாழ்க்கை முழுவதும் | திபா 63:4 |
| 8. | தலைமுறை தலைமுறையாக | திபா 61:6 |
| 9. | உம்மைப் | திபா 65:1 |
| 10. | புகழ்ந்து பாடுவேன் | திபா 61:8 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், *குடும்ப அட்டை எண்* மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 204**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**

**சரியான விடை எழுதியவர்கள் : 116**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. தஸ்நேவிஸ் மாதா அன்பியம் — *கார்லூஸ் பெனட்*
2. திவ்யபாலன் அன்பியம் — *சகாயராணி தனராஜ்*
3. பாத்திமா மாதா அன்பியம் — *ஜெனிட்டா மைக்கேல்*
4. இரக்கத்தின் மாதா அன்பியம் — *நேவிசம்மாள் கோமஸ்*

**பாராட்டுக்குரியவர்கள் : 112**

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. பிருந்தா சார்லஸ்
7. லூக்காஸ் சகாயம்
8. சரோஜா
9. ஜெயா

**அன்னை தெரசா**
10. சுரேஷ் பிரேமா
11. ரெயிசா சுஜய்
12. சுகன் மோனிஷா
13. ரொவீனா
14. ஜூலியட் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
15. நான்சி
16. டென்சி
17. ஜொசிட்டா

**கிறிஸ்தரசர்**
18. ரெக்ஸ் கிரீன்வெல்
19. ஜெகன் பெமினா
20. லூரட் வசந்த்
21. ஜூலியட் சாவியோ
22. செலஸ்கி கிளமென்ட்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
23. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
24. பிரின்சி

**பாத்திமா மாதா**
25. ஜெசிந்தா கான்ஸ்டன்
26. ராஜா ரீனா
27. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**
28. பாப்டிஸ்டா
29. பிரைட்டன் ஜெரோஃபின்
30. இருதயம்மாள் கொன்சால்
31. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**
32. சகாயம்மாள் பெனடிக்ட்
33. கல்;யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
34. அந்தோனிசாமி
35. ட்ரைபேனா
36. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
37. வெனிட்டாள்
38. எலிஜா இம்மானுவேல்
39. ஜான் ஆல்ட்;ரின்
40. சார்லட் பிராங்க்
41. ஜெயா அகஸ்டின்
42. ஜெசிமா கிளாரன்ஸ்
43. ரஸ்கின் வசந்தா
44. சாந்தி ஆல்ட்ரின்
45. ஜோ ட்ரினிஷா
46. அல்பின்
47. ரஜூலா அலாய்

**குழந்தை தெரசா**
48. கிறிஸ்டி லிஸ்டன்
49. பெனி மொறாயிஸ்
50. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
51. மோனிகா செபாஸ்டின்
52. அந்தோனியப்பா பிச்சம்மாள்
53. எமல்டா
54. பிரான்சிஸ் வாஸ்
55. ஆரோக்கியராஜ் ஹெலினா

**மணல் மாதா**
56. கெயிட்டன் ஃபர்னான்டோ
57. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
58. ஜெனோ சேவியர்
59. ரோஸ்லின் தாமஸ்
60. சாண்டினா
61. ஆலிவர் வி. ராயன்
62. சகாயராணி
63. ஃபிலோ கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**
64. ஜோசபின் பர்னாந்து
65. ஷீபா

**பனிமய அன்பியம்**
66. மெர்சி கோமஸ்
67. ஜூடு ரதி
68. ஜாக்குலின் வினோதினி

**பவுலடியார்**
69. ராஜா ரோஸ்லின்
70. ஜான்சன் ஓஃபிலியா
71. லீமா ரோஸ்
72. ஹெலினா
73. காத்தரினா டிவோட்டா

பரிபூரணமாதா
74. சப்னா கின்ஸ்டன்
75. மெடோனா

**பொம்பெயி மாதா**
76. மாத்யூ கர்டோசா
77. தெரசா பிரகாஷ்
78. அந்தோனியம்மாள் மச்சாது
79. டிஃபானி அண்டோ
80. லூடா கான்ஸ்டன்
81. ஜான்சிராணி அமல்ராஜ்

**இராயப்பர்**
82. இந்திரா ரெஃப்லின்
83. நேவிசம்மாள்

**சவேரியார்**
84. டெலிலா அமலன்
85. ரூபா மனுவேல்
86. அண்டன் சகாயம்
87. ஜென்சி ஜோர்னஸ்
88. அனுஷ்யா பீட்டர்
89. வினிஸ்டா ஹெரின்

**செபஸ்தியார்**
90. அந்தோனியம்மாள் டென்சிங்
91. ஜெசிலா சேவியர்
92. அஸ்கேனியஸ்
93. பிரவீணா
94. பிரின்சி லியோ

**சிந்தாத்திரை மாதா**
95. நேசம்
96. ஜூடி ஆரோக்கியராஜ்
97. ராஜி ஜஸ்டின்
98. இன்ஃபன்டா ஷரான்
99. சில்வியா அன்டோனட்

**சிறுமலர் அன்பியம்**
100. விஜி சகாயராஜ்
101. எல்சிட்டா ஆனந்த்
102. செலஸ்டின்
103. சோஃபியா ஜோசப்

**சூசையப்பர்**
104. கிறிஸ் ரிஜோ
105. ரூபி கொர்னேலியுஸ்
106. ஹேமலதா
107. மோனிஷா காஸ்பின்

**திருச்சிலுவை**
108. சரோலின் கில்டன்
109. ரமணி டிவோட்டா
110. ஜஸ்டின் ஸ்நோ குளோரி

**வியாகுல மாதா**
111. கெலிண்டன்
112. லூர்து லினட்

**குடும்ப அட்டை எண் தராதவர்கள்**
113. பிரிசில்லா
114. பெர்லி பென்சன்
115. டாஃப்னி ஃபர்னான்டஸ்
116. சுரேஷ் ஆனி

## பரிசு பெறுபவர்கள் : 4

| | |
|---|---|
| 117. ஏரல் | ஜாய்ஸ் ரத்தினம் |
| 118. சென்னை | அம்முகுட்டி |
| 119. தூத்துக்குடி காந்திநகர் | அனிதா |
| 120. தூத்துக்குடி இரத்னபுரம் | சலேட் |

## பாராட்டுக்குரியவர்கள் : 84

**ஆலந்தலை**
121. மரியம்மாள்
122. பொன்சேகா
**வீரபாண்டியன்பட்டணம்**
123. ரேச்சல் ராயன்
**பழைய காயல்**
124. மலர்
**சிப்பிகுளம்**
125. ஜெனசிஸ்
**ஆறுமுகனேரி**
126. தொம்மை அந்தோனி
127. ஜெயராணி
**ஏரல்**
128. ஜாய்ஸ் ரத்தினம்
**புதியம்புத்தூர்**
129. ஹெலன் அன்னமணி
**சென்னை**
130. கமலஜோதி ஜெயசீலன்
131. ஒஃபிலியா தாமஸ்
**செங்கல்பட்டு**
132. மார்கரட் மேரி
**பாளையங்கோட்டை**
133. பிரேமா குணசீலன்
134. ரோசி
135. மிக்கேல் அம்மாள்
136. டெனிசா கிளாட்
**சங்கரன்கோவில்**
137. செல்வராணி
138. ஆலன் ஜாக்ப்ரியோ
139. சுவாமிநாதன்
**பேட்டை**
140. ஹெலனிட்டா
**கயத்தாறு**
141. அமல்ராஜ்
**பெரியகுளம்**
142. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
143. ரொசாலி
144. மரிய மதலேன்
145. ஜெர்மேன்

**கோயம்புத்தூர்**
146. ராஜேந்திரன் அருள்
147. சத்யா சேவியர், சூலூர்
**பல்லடம்**
148. பிரான்சிஸ் ஆர்லன்
**திருச்சி**
149. மோனிட்டா கிறிஸ்டி
150. மேத்யூ விவேக்
151. டோனி
152. ஜான்சி ராணி
**சேலம்**
153. செல்வ நாயகி
**மதுரை**
154. சகோ. ஜான்சி மேரி
**வடக்குத்து**
155. ஹென்றிதாஸ்
**பரமக்குடி**
156. சைமன் சாந்தி

**தூத்துக்குடி நகர பங்குகள்**
**திரு இதயங்களின் பேராலயம்**
157. ரஜூலா ஜான்போஸ்கோ
158. பீட்டர் ஜெயந்தி
159. கிரேட்டா ராஜா
160. ரிமோல்டா
161. ரமோலா கமிலஸ்
162. ஜெயா ஃபெலிக்ஸ்
163. ஜேன் கிளைட்டன்
164. பெனிட்டா
**குருஸ்புரம்**
165. ஆசீர்வாதம்
166. பௌவுசி ஜோ மைக்கேல்
167. ஜான்சி மென்டிஸ்
168. பிளசி செல்வராஜ்
169. டெல்பின்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
170. சுகிர்தா
171. ஷெரினா
172. சகாயம்
173. செல்வி ஆன்சலி
174. ரெபிஷா

**யூதா ததேயு கோவில்**
175. ரோஸ் சேவியர்
176. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
177. யூஜினியா கதலியா
178. ரியாலினோ
179. அன்சிட்டா
180. அனிதா
181. பேபி வால்டர்
182. பின்டன் சோஃபியா
183. ஷாந்தினி
184. ரமேஷ் நர்மதா
**லூர்தம்மாள்புரம்**
185. மெர்சி
186. ஜெயபாலன் டெலிலா
187. பிளைசி ஜோசப்
**சார்லஸ் கோவில்**
188. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
189. செக்கரியா சாமுவேல்
190. ஜோசி குணபாலன்
191. வினிஃபிரட் பிரின்ஸ்டன்
192. ஜெசிந்தா பர்னாந்து
193. லிஜியா பர்னாந்து
**இஞ்ஞாசியார்புரம்**
194. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
195. விர்ஜின்
196. தயாபர ராணி
197. ரியா
**அந்தோனியார் கோவில்**
198. சோஃபியா விஜய்
199. இருதயம்மாள் கபிரியேல்
200. சுஜாதா மகேஷ்
**திரேஸ்புரம்**
201. கோல்வின் ஜேசுராஜ்
**பாத்திமா நகர்**
202. மேரி ஹேம்லின்
203. ஜெனோஃபியா
**கோவளம்**
204. சரோஃபின் ஜோசப்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 201**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 204**

**மாதம் ஒரு மாதா படம் : 45**



R. ஜோனஸ் ஆல்டஸ்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 55)

## பிப்ரவரி - 2024

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | **அருள்முனைவர் குமார்ராஜா** | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | **அருள்பணி சைமன் ஆல்டஸ்** | 74485 18127 |
| களப் பணியாளர் | : | **சகோதரர் ஆல்ட்ரின்** | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 07.10 - 07.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.01.2024

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

512. நமது பேராலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட திருப்பலி 29.12.2023 வெள்ளி காலையில் **மாதா தொலைக்காட்சியில்** ஒளிபரப்பு செய்யப்பட்டது.

513. லூர்து மாதா இளம்பெண்கள் சபையின் 4ஆவது ஆண்டுவிழா 17.12.2023 ஞாயிறு காலை 06.30 திருப்பலியில் கொண்டாடப்பட்டது. புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றதுடன், புதிய உறுப்பினர்கள் நாடா அணிந்து சபையில் சேர்ந்தனர்.

514. ஆண்டின் இறுதி நாளான 31.12.2023 ஞாயிறு மாலை 06.30க்கு **நன்றி வழிபாடு** நடைபெற்றது.

515. ஆண்டின் முதல் நாளான 01.01.2024 திங்கள் அன்று காலை 08.00 திருப்பலிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை தலைமையேற்று, 5 சிறுவர்களுக்குப் **புதுநன்மை** வழங்கினார்கள்.

516. அந்தத் திருப்பலியின் நிறைவில் **"தங்கத் தேர் 2023 - ஓர் ஆவணம்"** என்னும் சிற்றேட்டை மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் வெளியிட்டார்கள். மொத்தம் 20 பிரதிகளே அச்சிடப்பட்ட இச்சிற்றேட்டின் முதல் 3 பிரதிகளைத் தண்டல் ஜான்சன், தண்டல் கிளாட், திரு. ஜெனோ ரவேல் மூவரும் பெற்றுக்கொண்டனர். மேதகு ஆயர் அவர்களுக்கும் ஒரு பிரதி வழங்கப்பட்டது.

517. அதனைத் தொடர்ந்து, **"பனிமயம்" இதழின் வெள்ளிவிழா ஆண்டை** (1999-2024) மேதகு ஆயர் அவர்கள் தொடங்கி வைத்து, இதழின் இணை நிறுவனர் முனைவர் அருள்பணி. ஜான் சுரேஷ் அவர்களுக்கும், முதல் பொறுப்பாசிரியரும், கடந்த 25 ஆண்டுகளாக இதழில் எழுதும் எழுத்தாளருமான திருமிகு. கலாபன் வாஸ் இருவருக்கும் "பனிமயம்" விருதுகளை வழங்கி, பாராட்டினார்கள்.

518. பேராலயப் பங்கின் "ஸ்நோஸ் யூத்" இளைஞர்களின் 25ஆவது வெள்ளி விழா **புத்தாண்டு கலைநிகழ்ச்சிகள்** 01.01.2024 திங்கள் இரவு 07.00 மணிக்குப் பேராலய வளாகத்தில் நடைபெற்றது. பங்குத் தந்தையர் குமார்ராஜா, சைமன் ஆல்டஸ் இருவரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளோடு, நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

519. ஜனவரி மாதத்துக்கான **விவிலியப் பாசறை** (எண்: 101) 02.01.2024 செவ்வாய் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் "விவிலியம் காட்டும் நல்ல பழக்கங்கள்" என்ற தலைப்பில் நடைபெற்றது. வழக்கமான பங்கேற்பாளர்களோடு, ஆசிரியப் பணிக்காக மறைமாவட்டத்தில் பதிவு செய்துள்ள ஆசிரியர்களும் சேர்ந்து மொத்தம் 68 பேர் கலந்துகொண்டனர்.

520. 07.01.2024 ஞாயிறு இரண்டாம் திருப்பலியில் நடைபெறவிருக்கிற பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுத் தேர்தல் பற்றிய விளக்கவுரை வழங்கப்பட்டது. 10, 12.01.2024 புதன், வெள்ளி இரு நாள்களும் பொதுநிலையினர் பணியகத் தொண்டர்கள் அனைத்து அன்பியங்களையும் சந்தித்து, மேய்ப்புப் பணிக்குழுத் தேர்தல் பற்றி விளக்கம் அளித்தார்கள். 21.01.2024 ஞாயிறு முற்பகல் அன்பிய வழிகாட்டிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. பிற்பகலி;ல் நிதிக்குழு, செயற்குழுக்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

521. தைப் பொங்கல் பெருவிழாவை முன்னிட்டு 15.01.2024 திங்கள் காலை 06.30 திருப்பலி பொங்கல் சிறப்புத் திருப்பலியாகக் கொண்டாடப்பட்டது. திருப்பலியின் நிறைவில் வந்திருந்த அனைவருக்கும் **பொங்கல்** வழங்கப்பட்டது.

522. **"திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்கான"** பனிமய நோன்பு வழிபாடு (39) 28.01.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் பெயர்களைக் கொடுத்திருந்த இளையோருக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

523. பிப்ரவரி மாதத்துக்கான **விவிலியப் பாசறை** (எண்: 102) 30.01.2024 செவ்வாய் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் "பழைய ஏற்பாட்டில் மரியன்னையின் முன்னோடிகள்" என்ற தலைப்பில் நடைபெற்றது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 145. | மரிய அனிஷா | ஜெய்ஸ்டன்-சிந்துஜா | 31.12.2023 | திருச்சிலுவை |
| 146. | லியாண்ட்ரா | ஆல்சன்- சேசு மரிட்டா | 07.01.2024 | சூசையப்பர் |
| 147. | பிரனிஷா | பிரின்ஸ்டன் - கவி பிரியா | 07.01.2024 | செபஸ்தியார் |
| 148. | எல்சா மரியேல் | பார்த்திபன் -மேரி ஷெர்லி | 14.01.2024 | திவ்யபாலன் |
| 149. | காலேப் | இம்மானுவேல் -சுஷ்மிதா | 14.01.2024 | காவல்தூதர் |
| 150. | ஜாஸ்லின் அனா | பார்கவ் - இன்பென்டா | 21.01.2024 | கிறிஸ்தரசர் |



## வாழ்த்துகின்றோம்

## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 177. | ஜோ நிகில் | பெலிக்ஸ்- ஜெ∴பினா | 01.01.2024 | ஜூடு |
| 178. | ஆல்ட்ரின் | சுரேஷ் - அந்தோணியம்மாள் | 01.01.2024 | சிந்தாத்திரை |
| 179. | ஜில்லெஸ் ராஜ் | பபின் - ஹெலன் | 01.01.2024 | அன்னை தெரசா |
| 180. | ஆக்னல் | நெப்போலியன்- ஜாஸ்மின் | 01.01.2024 | சூசையப்பர் |
| 181. | ஆட்லின் | நெப்போலியன்- ஜாஸ்மின் | 01.01.2024 | சூசையப்பர் |
| 182. | அமல நிபி | விமலன் - செல்வி | 06.01.2024 | மணல்மாதா |
| 183. | அபினா | விமலன் - செல்வி | 06.01.2024 | மணல்மாதா |
| 184. | ஸ்னோபின் டியானா | அலெக்ஸ் ஜூடு-சரோனா | 27.01.2024 | அன்னை வேளாங்கன்னி |



## ஆசி கூறுகின்றோம்

## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 128. | ஜோசப் ஓர்ஜின் - சிருஷ்டிகா | காவல்தூதர் | 08.01.2024 |
| 129. | சைமன் அமீரோ - டனிஷா | செபஸ்தியார் | 22.01.2024 |
| 130. | பிரனாப் வாஸ்- மெரோஷா | அன்னை தெரசா | 26.01.2024 |



## இறைவனைப் போற்றுகிறோம்

## 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 42. | பொன்னம்மாள் | அண்டோ | 23.12.2023 | தஸ்நேவிஸ் மாதா |
| 43. | ரோசி | ஜோஸ்வா | 02.01.2024 | அன்னை வேளாங்கன்னி |
| 44. | லெரின்ஸ் ரொட்ரிகோ | பிரசன்னா | 08.01.2024 | பொம்பெயி மாதா |
| 45. | ரெஜிஸ் | பாப்பினுஸ் | 17.01.2024 | கிறிஸ்தரசர் |



## செபிக்கின்றோம்

## 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 184. | லாரன்ஸ் கொரேரா | அமலா ராணி | 25.12.2023 | மணல் மாதா |
| 185. | ஜோசப் பர்னாந்து | இராஜேஸ்வரி | 01.01.2024 | பரிபூரண மாதா |
| 186. | டில்டன் பர்னாந்து | எல்சிற்றா | 19.01.2024 | மிக்கேல் அதிதூதர் |
| 187. | பொன்னம்மாள் பர்னாந்து | ரவி ∴பர்னான்டோ | 19.01.2024 | தஸ்நேவிஸ் மாதா |

## நடைபெறவிருப்பவை

- ★ 02.02.2024 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 03.02.2024 மாதத்தின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ "அரசுத் தேர்வு எழுதவிருக்கும் மாணவ, மாணவியருக்காக" **பனிமய நோன்பு வழிபாடு** (40) 18.02.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெறும்.
- ★ 01.02.2024 வியாழன் முதல் 11.02.2024 ஞாயிறு வரை **புனித லூர்து அன்னை கெபி**யில் அருளிக்க ஆசீரும், திருப்பலியும் நடைபெறும்.
- ★ 10.02.2024 சனி அன்று மாலை 6.30 மணிக்கு நற்செய்தி நடுவ இயக்குநர் **அருள்பணி. ஸ்டார்வின்** அவர்கள் தலைமையில் மாலை ஆராதனையும், 11.02.2024 ஞாயிறு அன்று காலை 6.30 மணிக்கு இயேசு சபைத் துறவி **அருள்பணி. அகஸ்டின்** அவர்கள் தலைமையில் திருவிழாத் திருப்பலியும், மாலை 6.30 மணிக்கு புனித லூர்து அன்னையின் சப்பரப் பவனியும் நடைபெறும்.
- ★ தவக்காலம் எதிர்வரும் 14.02.2024 **சாம்பல் புதன்** வழிபாட்டுடன் தொடங்குகிறது. அன்றைய மூன்று திருப்பலிகளிலும் சாம்பல் பூசப்படும். இதர தவக்கால சிறப்புகள் தனியே தரப்பட்டுள்ளன.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 159. | 06.02.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | குணமாக்கும் இறைவார்த்தை |
| 160. | 13.02.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | தலையான பாவம் 1: ஆணவம் |
| 161. | 20.02.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தலையான பாவம் 2: பேராசை |
| 162. | 27.02.2024 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தலையான பாவம் 3: பொறாமை |
| 163. | 05.03.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | தலையான பாவம் 4: கோபம் |

# தவக்காலம் 2024 திருநிகழ்வுகள்

## சிலுவைப் பாதை

1. ஒவ்வொரு நாளும் திருப்பலி முடிவில் சிலுவைப் பாதை நடைபெறும். வார நாள்களில் முதல் திருப்பலியின் முடிவிலும், ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டாம் திருப்பலியின் முடிவிலும் நடைபெறும்.
2. ஒவ்வொரு வெள்ளியும் அதிகாலை 04.30 மணிக்கு பேராலய வளாகத்தில் சிறப்பு சிலுவைப் பாதை நடைபெறும்.
3. ஒவ்வொரு வெள்ளியும் மாலை 04.30 மணிக்கு பேராலயத்தில் பக்த சபையினர் வழிநடத்தும் சிலுவைப் பாதை நடைபெறும்.
4. ஒவ்வொரு வெள்ளியும் மாலை 06.30 மணிக்கு அன்பியங்கள் வழிநடத்தும் சிலுவைப் பாதை நடைபெறும்.

## சாம்பல் புதன் (14.02.2024) நோன்பு வழிபாடு

சாம்பல் புதன் (14.02.2024) **நோன்பு வழிபாடு** நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நோன்புடன் கூடிய சிலுவைப் பாதை, தவக்காலத் தியான உரை, நற்கருணை ஆசீர் நடைபெறும்.

**செவ்வாய்தோறும் திருச்சிலுவைச் சிற்றாலயத்தில் தவக்கால நற்செய்தியும், திருப்பலியும் - தலைப்பு: ஏழு தலையான பாவங்கள்**

*(விபரங்கள் முந்தின பக்கத்தில்.......)*

## வியாழன்தோறும் மாலைத் திருப்பலியைத் தொடர்ந்து குறுந்தியானங்கள்

15.02.2024 - சிலை வழிபாடும், இன்றைய புதிய சிலைகளும்
22.02.2024 - சொல்லத் தவறிய பாவங்கள்
29.02.2024 - பாவங்கள் நூறு!
07.03.2024 - இயேசுவின் உவமைகள் காட்டும் பாவங்கள்
14.03.2024 - பாவ அறிக்கையின் சிறப்புகள்
21.03.2024 - ஒப்புரவு அருள்சாதன ஆசீர்வாதங்கள்



## லூர்து மாதா கெபியில் விவிலியப் பாசறை

27.02.2024 செவ்வாய் மாலை 06.15 மணிக்கு விவிலியப் பாசறை "விவிலிய இறைவேண்டல்கள்".

# நினைவஞ்சலி

## 30ஆம் ஆண்டு



தோற்றம்
24.04.1965
மறைவு
30.06.1994

**கிளிப்டன் கோமஸ்**

## 8ஆம் ஆண்டு



தோற்றம்
07.12.1933
மறைவு
24.04.2016

**சேவியர் கோமஸ்**

என்றும் உங்கள் நினைவில் வாழும்

சகோதரர் / மகன் : **லிஸ்டன்**
சகோதரி / மகள் : **பியூலா**
மதினி / மருமகள் : **கிறிஸ்டி**
மச்சான் / மருமகன் : **நெவில்**

பேரன் பேத்திகள்
**அஷ்வந்த் கோமஸ், சிந்துஜா - ஜெயகரன், ஷீஜா - டேனி**
பேரன் / பூட்டன் : **மார்லோ**

## 23ஆம் ஆண்டு



தோற்றம்
06.10.1929
மறைவு
10.01.2001

**ரொசாரி கோமஸ்**

## 18ஆம் ஆண்டு



தோற்றம்
23.12.1938
மறைவு
11.06.2006

**ஜரின் ரோச்**

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மக்கள்
**லிஸ்டன்**
**பியூலா**

மருமக்கள்
**கிறிஸ்டி**
**நெவில்**

பேரன் பேத்திகள்
**அஷ்வந்த் கோமஸ், சிந்துஜா-ஜெயகரன், ஷீஜா-டேனி**
பூட்டன் : **மார்லோ**

34, கிரகோப் தெரு, தூத்துக்குடி

# விண்ணக வாழ்வின்
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் இருந்து விண்ணிற்கு விரைந்த எம் இமைகளுக்கு
எங்கள் இதயத்தின் சமர்ப்பணம்

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்;
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசாயா 62:3).



மண்ணில்
06.08.1950

விண்ணில்
18.02.2023

# S. ஜோபாய் மச்சாது

வாழ்நாளில் வழிகாட்டியாய் இருந்தீர்கள்
உறவுகளை நிலைநாட்டி மகிழ்ந்தீர்கள்
நிலையான நிறைவாழ்வுக்கே உழைத்தீர்கள்
நினையாத நேரத்தில் எமை பிரிந்தீர்கள்
இணையற்ற இறையரசில் இளைப்பாறிட,
இதயம் கனத்து இமைநீர் பனித்து
இருகரம் குவித்து இறைவனை வேண்டுகிறோம்.

பாசத்தோடு
நினைவுகூரும்

S. நட்சத்திரம்
F. கென்னடி
K. வினோத்
K. விஜய்

22, குருசடி சந்து, தூத்துக்குடி-1.
தொடர்புக்கு : 90259 41422
94434 67212

# 1ST YEAR ANNIVERSARY



**BLOOMED**

**17-06-1944**

**WITHERED**

**23-02-2023**

## JOTHI FERNANDO

**AGE:79**

**EVERYDAY IN SOME SMALL WAY I MISS YOU MORE**
**THAN WORDS CAN SAY IN MY HEARTS YOU WILL ALWAYS STAY**
**LOVED AND REMEMBERED EVERY DAY**

**There will be a requiem mass for**
**the soul of my beloved Mother**
**@6:30am 23rd Feb 2024@ OLS church.**

**Fondly remembered and forever missed by**
**RAJESH CARDOZA&FAMILY**

**20/76A,Roche Colony**
**3rd street,Tuticorin**

SHINY Ph : 98421 31493